292

Regd. No. M. 878.

தொகுதி 10 பகுதி 2.

23 JUL 1920

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச்செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

1920ஹு ஏப்ரல்மீ ரௌத்ரிஹு சித்திரைமீ

விஷயங்கள்.

தற்காலநிலைமை—ஆர். அரங்கசாமி ஐயர் பி. ஏ.	329
புத்தக விமர்சம்	336, 352
வர்ணாசிரம தர்மங்கள்—ஜெ. சீனிவாசராவ்	337
அஹிம்ஸை—பி. எஸ். ராமசுப்பையர்	345
ஜீவாபக்கம்—(பிக்ஷை)எஸ். ஆர். அனந்தநாராயணய்யர்	349
மாயாவாதம்—ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்	353

அ. அரங்கசாமி ஐயர் பி. எ., பி. எல். பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷச்சந்தா இந்தியாவுக்கு 2—0—0

அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4.

மதுரை விக்டோரியா அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது

Copy-right Reseved.

புதிய புஸ்தகங்கள்.

சற்குரு பாதங்களில்—இரண்டாம் பதிப்பு	0—2—0
சகோதரபாவம்—பி. எஸ். ராமசுப்பையர்	0—1—0
குழந்தைகளைப் பழக்கும் முறை—டி. ஏ. கோபாலசாமி நாயுடு	0—3—0
நம் குழந்தைகளும் நம் தேசத்து வருங்கால மகிமையும்—வி. ராமசந்திரையர்	0—1—0
தியாஸபியால் உள்ள பிரயோஜனங்கள்—ஏனங்குடி வி. ராமசந்திர நாயுடு	0—2—0
எல்லாம் வல்ல ஈசன்—கே. எஸ். ராமசந்திரையர் (சீக்கி [illegible] வெளியாகும்)	0—1—6
[illegible] ஷயம்—ஷையார்	0—4—0
[illegible] வேறு.	

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

அயக்காந்த திராவகம்.

இரும்பைப்பார்க்கிலும் கடினமான உலோகம் வேறொன்றுமில்லை தேக விர்த்திக்கு இதுவே சிறந்தது இதனால் தான் இளைத்தவன் இரும்பைத் தின்றால் கொழுத்தவன் பொன்னைத் தின்பான் என்று இவ்வுலகத்தில் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஒருவன் இந்த திராவகத்தை சாப்பிடுவதற்குமுன் தன் தேகம் எவ்வளவு நிறையுள்ளதென்று நிறுத்துக்கொண்டு அதன்பின் இந்த திராவகத்தை ஒரு மண்டலம் 40-நாட்கள் சாப்பிட்டு மறுபடியும் தராசில் நின்று நிறுத்துப் பார்ப்பானானால் ஏறக்குறைய முன்னிருந்ததற்கு அதிக நிறை இருப்பான் இதை ஒவ்வொருவரும் அனுபவத்தில் தெரிந்துகொள்ளலாம் தேக விர்த்தி இல்லாதவன் இரும்பைப் பழுக்கக் காய்ச்சி அந்த ஜலத்தில் அமிழ்த்தி அந்த ஜலத்தை தினந்தோறும் குடித்துவந்தால் நல்ல பலம் உண்டாகுமென்று வைத்திய சாஸ்திரங்கள் கூறுகின்றன அதற்கே அந்த குணம் இருக்கிறபோது அயத்தினுடையவும் காந்தத்தினுடையவும் சத்தை திராவகமாக இறக்கியிருக்கும் இந்த பரமௌஷதத்தை ஒருவன் உட்கொண்டால் அவன் தேகம வஜ்ர சரீரம் போலாய்விடுமென்பதற்கு என்ன தடை.

20-நாளைக்கு சாப்பிடக்கூடிய ஒரு புட்டியின் விலை ரூபா 1 8 0
40-நாளைக்கு சாப்பிடக்கூடிய புட்டி விலை 2 10 0

C. T. வேலு அண் கோ, சவுகார்பேட்டை, மதராஸ்.

படங்கள். விலைசரசம். படங்கள்.

பிளாவட்ஸ்கி அம்மையார 0—1—0
அனிபெஸண்ட் 0—1—0
கர்னல் ஆல்காட் 0—1—0
தாமோதர மாவலங்கர் 0—1—0
ப. நாராயணையர். 0—1—0

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

ஒவ்வொருவரும் எளிதில் செய்யக்கூடிய பெருபகாரம்!

மரணம் வரப்போகிறதே, மரணத்திற்குபின் எது வருமோ என்று எவ்வளவுபேர் ஏக்கமுற்றிருக்கின்றனர். உயிர்நீங்கிய நம் உறவோர் இறந்தபின் எவ்வளவு துன்புறுகின்றனரோ என்று எவ்வளவுபேர் கலங்குகின்றனர். அவர்களுக்கு தேறுதல் செய்யக்கூடிய மரணபயம் வேண்டாம் என்ற சிறு புத்தகத்தை வாங்கிக் கொடுத்தலைவிட சிறந்த புண்ணியம் இல்லை. விலை 0—2—0 டஜன் 1-4-0 தபால் கூலி வேறு.

சத்குருபாதங்களில்—என்ற அழகிய சிறு புத்தகத்தை டஜன் கணக்காய வாங்கி பள்ளிப்பிள்ளைகளுக்கும் உற்சவகாலங்களில் வந்துசேரும் பக்தர்களுக்கும் இனாமாக கொடுத்தால் விசேஷ சுகிருதம் உண்டு. இக்காலத்தில் எளிதில் அறியும்படி சாதன சதுஷ்டயங்களை இவ்வரிய நூல் போதிக்கின்றது. விலை 0—2—0 டஜன் 1—4—0. தபால்கூலி வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

இந்தியாவில் மிகப்பெரிதும்
பழமையுமான வைத்யசாலை எது?

N. சுப்பாநாயுடு,

கமலாராம் அண் கோ,

எங்கிரேவர், ரப்பர்ஸ்டாம்பு மேக்கர், போட்டோ, எலெக்ட்ரோ, ஸ்டீரியோ, & ஒரிஜினல் பிளாக் மேக்கர

ரப்பர் ஸ்டாம்புகள் புதுமாதிரி டிஸைன்ஸ்களும், எபிரகுவின் ஸ்டாம்புகளும், தெய்வ முகர்கள், கையெழுத்து ஸ்டாம்புகள அரக்கு சீல்கள், பியூன் வில்லைகள், டோர் பிளேட்டுகள், நாலு ஐந்து கலர் பிளாக்குகள், டிரேட் மார்க்குகள் ஸ்டீரியோ எலெக்ட்ரோ பிளாக்குகள், தங்க மெடல்கள், வெள்ளி பாத்திரங்களில் எங்கிரேவிங வேலைகள், அச்சாபீசுகளுக்குவேண்டிய பிளாக்குகள், வியாவண்டார்கள் குறிப்பிட்ட டயத்தில்ஆர்டர்களை கவனித்து செய்து கொடுக் டும்.

கமலாராம் & கோ,

109 திண்டுக்கல் ரோட், மதுரை.

N.B:-அநேகவிதமான கலர்போர்டு பெயிண்டு செய்துகொடுக்கக்கூடும்.

மகமதியன் பிரஸ் திண்டுக்கல்ரோட் மதுரை:—1920.

இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்யசாலை எது?

1881-ஸூ ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ஹர ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

சஞ்சீவி

பாலமித்ர

300 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்க்கு நன்ராய் ஆலோசனை செய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர ஸம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

முதன்மையான

மருந்து சென்ற 35 ஸூ காலமாய் உபயோகிப் போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையையும் கொடுத்துப் பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

32 மாத்ரையின் விலை ரூ 1

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்கிரக ஔஷதாலயம்
.45, மேலக் கோபுர வீதி
மதுரை.

இருமல், கபம் காசம் இவைகளுக்கு சிறந்தமருந்து

காசாந்தக

மாத்ரைகள் டப்பிக்குவிலை ரூ 1

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிறோம்

உ

ஸ்ரீ ராமஜெயம்.

புது ஜவுளிக்கடை நோட்டீஸ்.

மு. ரா. பெருமாளய்யர்

மேலக்கோபுரவாசல் தெரு, மதுரை

மதுரை மேலக்கோபுரவாசல் தெரு டோர் நம்பர் 113, தென்சரகில் முன் டிப்டி கலெக்டராயிருந்த மகா-ள-ஸ்ரீ ராமாராயரவர்கள் பெரியமாடி கிரஹத்தில் ஏற்படுத்தியிருக்கும் ஜவுளிக்கடையில் அநேக ஊர்களிலிருந்து வரும் பட்டுச்சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், பட்டுக் கரையிலும், சாதாவிலும், ஜரிகையிலும், வேஷ்டி ஜோடி, துப்பட்டா, தினுசுகளும், உள்ளூரில் தயாராகும் ஜரிகை சாதா, டோரியா, சுன்னடி, சேலை, சித்தாடை, ரவிக்கை தினுசுகளும் 150, 200 நம்பர் நூலில் ஜரிகைஜோடி, துப்பட்டாக்களும், சாயவேஷ்டி, தினுசுகளும் இன்னும் அநேக ஜவுளி தினுசுகளும் விலை சலீசாகவும் நயமான ஜவுளிகளாகவும் சொற்பலாபத்திற்கு விசேஷ வியாபாரம் செய்து கொண்டு வருகின்றமையால் தேவையானவர்கள் எங்கள் ஜவுளிக்கடைக்கு வந்து வேண்டிய தினுசுகளை வாங்கிக் கொள்வீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

N. B.—அயலூர்களிலிருந்து கடிதமூலமாய் வரும் ஆர்டர்களை உடனே கவனித்து அதிக பந்தோபஸ்தாய் வி. பி. பார்சல் மூலமாய் ஜவுளி தினுசுகள் அனுப்பக் கூடும். எங்கள் ஜவுளி விலை விபர ஜாப்தா (கேட்லாக்) வேணுமானால் இனாமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

வைத்யரத்ன பண்டிட் டி. கோபாலாசார்லு அவர்களின் சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

கருஷன்ப்பரீட்சிக்கப்பட்டது !

சென்ற இருபத்தைந்து வருஷங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்பட்டது !!

பிளேக் மருந்து.

1. எல்லாவித பிளேக் ஜ்வரங்களுக்கும் ஸஞ்சீவினி இதுவே.
2. முன் சாப்பிட்டால் பிளேக் வியாதியை வராமல் தடுக்கும்.

விலை பெரியசெட் ரூ 2—2—0
,, சிறிய ,, ரூ 1—6—0

ஜீவாமிருதம்.

1. ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும் உலோகங்களாலும் தயார் செய்யப்பட்டது
2. ஆரோக்கியத்தையும் தைரியத்தையும் உண்டாக்கும்.
3. பலத்தையும் உத்ஸாகத்தையும் விர்த்தியாக்கும்.

விலைபெரிய சீசா ரூ 3—4—0
,, சிறிய ,, ரூ 1—12—0

காலரா மருந்து.

1. இந்த ஔஷதத்தினால் காலரா விலகிப்போகும்.
2. சீக்கிரத்தில் வாந்தியையும் பேதியையும் போக்கும்.

விலை பெரிய செட் ரூ 1—2—0
,, சிறிய ,, ரூ 0—12—0

அமிருதாமலக தைலம்.

1. வித்யார்த்திகளுக்கும் போசனை ஜாஸ்தியுள்ளவர்களுக்கும் அதிக உபயோகமானது
2. நேத்திர ரோகிகளுக்கும் சிரோ ரோகிகளுக்கும் ரொம்பவும் ஹிதமானது.

விலை பெரிய புட்டி ரூ 1—0—0
,, சிறிய ,, ரூ 0—8—0

பலவித வியாதிகளுக்கும் இவ்விடத்தில் மருந்துகள் கிடைக்கும். காட்லாக்கு இனாமாக அனுப்பப்படும்.
தபால் சார்ஜும், பாக்கிங் கூலிகளும் பிரத்தியேகம்.
வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு
எழுதிப் பெற்றுக்கொள்ளவும்:—

மானேஜர்,
ஆயுர்வேதாசிரமம்,
55, ஆச்சாரப்பன் தெருவு,
மதராஸ்.

ஜகப் பிரசித்திபெற்ற
ஜின்டான்மாத்திரை.

எண்ணிலாக்குணங்கள் நிரம்பிய இந்த ஜின்டானை இப்போதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப் பெற்று நாடெங்கும் பரவி பலபல வியாதிகளைக் கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளுயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகளை அணுகவொட்டாமல் தடுப்பதற்கு இம் மாத்திரைகள் நிரம்பவு குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம் விலையோ சரசம்.

265 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ 1. 75 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 15 மாத்திரை பொட்டணம் 1 அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

எஸ் வைத்தியா அண்டு கோ

மதராஸ்.

பிராஞ்சிகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள், டாபிலட்கள், பாலாமிருதம், மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், நிவ்சோ எஸ்ஸென்ஸ், பித்களை மெழுகு வத்தி ஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்.

எங்கள் மதுரை ஏஜண்டு:—

V. சின்னகிருஷ்ணம நாயுடு,
ஸ்ரீ கிருஷ்ண ராஜா அண்டுகோ, மேலக்கோபுர வீதி மதுரை

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 10	ரௌத்ரிஞூ சித்திரைமீ 1920ஞூ ஏப்பிரல்மீ	பகுதி 12

தற்கால நிலைமை.

உலகத்தில் சண்டை முடிந்தபாடில்லை. மிகவும் கோரமாய் நடந்து, தோல்வியடைந்தவர்களையும் ஜயமடைந்தவர்களையும் ஒருங்கே பலமற்றவர்களாய்ச் செய்த மகா யுத்தமானது முடிந்தது என்பது வாஸ்தவம். சமாதானம் ஏற்பட்டதாக பிரிடிஷ் ராஜ்யமுழுதிலும நேசக்கக்ஷியார் தேசங்களிலும் சமாதானக் கொண்டாட்டங்கள் கொண்டாடினதும வாஸ்தவம். ஆனால் ஒவ்வொரு தேசத்திலும் தன தேசம் ஒன்றுமே தேசம், மாற்றான் தேசம் ஒழியின் எனக்கென்ன வென்று நினைத்த லில்லாத ஒரு சிலா "இது சமாதான மன்று, போலிவேஷமே. உள்ளே பிணத்தை வைத்து அதற்குச்சுற்றி பளிங்குக்கற்களால் மூடப்பட்டு அழகாய் வெளித்தோற்ற மமைக்கப்பட்ட சமாதியே" என்று சொல்லா நின்றனர். மனச்சமாதான மன்றோ சமாதானம்.. பாணவேடிக்கையும், பீரங்கி வேட்டுகளும், கொடிகள் பார்த்தலும், உண்டிகள் உண்பதும், பசப்பான வார்த்

தைகளும் உண்மைச்சமாதான மாகுமா? ஆயிரக் கணக்கான வர்ணத்துணிகளை ஆலவட்டங்களாயும் கொடிகளாயும் கட்டினால் என்ன, மரங்களிலுள்ள இலைகளை யெல்லாம் பறித்துத் தோரணங்கள் கட்டினால் என்ன, உள்ள துப்பாக்கி மருந்தை யெல்லாம் ஆனந்த வெடிகள் விட்டால் என்ன, மங்களவாத்தியங்கள் எல்லாம் முழங்கினால் என்ன, மந்திரிமார்களும், தந்திரிமார்களும் சாமாரியாய் வார்த்தைகளைப் பொழிந்தால் என்ன, மனத்தின் கண் பகைமையும், வெகுளியும், லோபமும், துவேஷமும் குடி கொண்டிருப்பின், கொண்டாடுபவர்க்குள் கூட உண்மையில் அஸமாதானமே தானிருக்கும். சிற்சில சமயங்களில் உள் சமாதான மில்லாதார் அதை மறைப்பதற்காகவே கூச்சல் போடுவது வழக்கமாயிருப்பதுபோல், இச்சமாதானக் கொண்டாட்டங்கள் நிகழ்ந்தனவென விளங்குகின்றது.

***

என்னெனில் ருஷியாச்சண்டை முடிந்தபாடில்லை, துருக்கியுடன் சமாதானம் முடியவில்லை. நிபந்தனைகளை மசோதாச் செய்து அனுப்பி யிருப்பதில், அவை அநீதியாயும், மானத் தாழ்வாயும், முன் பிரிட்டிஷார் கொடுத்த வாக்குறுதிக்கு மாறாகவும் இருப்பதாயும் துருக்கியைச் சேர்ந்தவர்களும் இந்திய மகம்மதியர்களும் முறை யிடுகிறார்கள். மேலும் நேசகக்ஷியார்களுக்குள்ளும் மனமுரண்பாடுகளிருப்பதாய்த் தோன்றுகிறது. மேலும் இங்கிலாந்துக்கு அடுத்து உள்ள அயர்லாந்து தீவில் உள்ளவர்கள் பல நூறு வருடங்களாய் அநீதியாய் ஆளப்பட்டுவருகிற காரணம் கொண்டு அன்னிய நாடுகளில் அதிகமாய்க் குடியேறினார்கள். இருந்தபோதிலும் ஜனமபூமி யென்ற அபிமானம் போகுமா? அயர்லாந்தின் தாகத்தை நினைத்து நினைந்து நெக்குருகி, மனநொந்து, அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் குடியேறியிருந்த அயர்லாந்துக்காரர்கள் அயர்லாந்துக்கு சுயாட்சிக்கும் மேற்போன இங்கிலாந்துக்கு வெளியான

சுதந்தரம் வேண்டும் என்று ஆரவாரம் செய்கின்றனர். அயர்லாந்திலேயே இங்கிலாந்தின் ஆளுகையை மறுத்து சுதந்தர ஆட்சி ஏற்படுத்தியதாகப் பேர்பண்ணி, அதற்காக சபைகள் யோயஸ்தலங்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அவைகளைக் கண்டித்து ஆங்கிலேயர் அடக்குமுறைகளைக் கையாண்டு வருகின்றனர். ஆனால் ஐரிஷ் ஜாதியாரோ சீக்கிரத்தில் சலிக்கும் மனத்தர், அமைதியற்றவர், ஒரு சமயத்தில் தன்னை மறந்து அன்பால் பூரித்து தாம் அபிமானிக்கும் வஸ்துவுக்காக சர்வத்தையும் பரித்தியாகம் செய்யக்கூடிய தன்மையர், மற்றொரு சமயம் தம்மை மறந்து கோபாவேசம் கொண்டு உயிரைத் திரணமாய் மதித்து, பின் வருவனவற்றைக் கருதாது கருமத்தை யிழைப்பவர். இத்தகைய கெல்டிக் ஜாதியைச் சேர்ந்த ஐரிஷ் ஜாதியார் தாய் நாட்டின் அபிமானத்திற்கென்று ஆங்கில அதிகாரிகளைக் கொலைசெய்துவருகின்றனர். தமக்கு அருமையான தாய் நாட்டின் மேல் இரத்தத்தைச் சிந்துகின்றனர். இரத்தம் சிந்துவதின் பலனைக் கருதும் சுபாவம் அவர்களுடையது அல்ல. ஐயோ பாவம்! எவ்வளவு காலம் அன்னாட்டில் இச்சண்டை நிகழுமோ? அறியேம். ஆங்கிலருக்கும் ஐரிஷ் ஜாதியாருக்கும் நற்புத்தி தோன்றி சீக்கிரத்தில் ஒரு சமாதானம் நிகழும்படி இறைவனது திருவுள்ளம் விரைவில் ஏற்படாதா?

***

அமெரிக்காவின் பிரஸிடெண்டு வில்சன் அவர்கள் இவ்வியுத்த சமாதானமானது எங்ஙனம் நிகழவேண்டும் என்று ஆதியில் எவ்வளவு பாடுபட்டார் என்பதை நேயர்கள் அறிவார்கள். ஆனால் உலகமானது அவ்வளவு பரிபாகத்திற்கு வரவில்லை போலும். இன்னும் சண்டை ஓயும் தருணம் வரவில்லை போலும். உருத்திராக்ஷம் தரித்த பூனை போலும், விபூதி தரித்த கிழப்புலிபோலும், ஆசையென்பது நிராசையின் தோலைப் போர்த்திக்கொண்டு நடிக்கின்

றது. தேச ஜாதியார்களின் சபை யொன்று ஏற்பட்டு, ஒரு தேசத்திற்கும் கெடுதி ஏற்படாவண்ணம் பாதுகாக்க வேண்டுமென்றிருக்க, ஒரு தேசத்தையும் ஒருவரும் ஆக்கிரமிக்கலாகாதுஎன்று பிரஸிடெண்டு வில்ஸனது நிபந்தனைகள் கூற, அதே வேடம் தரித்துப்பழைய ஆசைகளும் லோபங்களும் இப்போதும் நடிக்கின்றன. அமெரிக்காவிலும் கக்ஷிப்பிரதிகக்ஷிகள் ஏற்பட்டிருக்கின்றன. வில்சன் உண்மையில் ஏமாற்றப்பட்டுவிட்டார். அமெரிக்காவும் சமாதான உடன்படிக்கையில் சேரவில்லை.

***

இப்படியிருக்க, உலகத்தில் உள்ள தேசங்களில் எல்லாம், தமக்குள்ளாவது சமாதானமானது நிகழ்கின்றதா? இல்லை. முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் சண்டை மும்முரமாய் நடக்கிறது. முதலாளிகள் ஆசைக்கோ அளவு, கரை கிடையாது. உலகம் முழுதிலும் எங்கள் இலாபம் மும்மடங்கு அதிகரிக்கவேண்டுமென்கின்றனர். தொழிலாளிகளோ தங்களுடைய பலத்தையும் இன்றியமையாத் தன்மையையும் முற்றிலும் அறிந்துவிட்டனர். அகவிலை அதிகரித்திருக்கின்றமையால் தங்கள் ஊதியத்தையும் அதிகரிக்கவேண்டும் என்றும், ஓய்வு நேரங்களை அதிகரிக்கவேண்டும் என்றும் கேட்கின்றனர். அவர்கள்கேட்டதைக் கொடுக்காவிடில் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கின்றனர். இவர்கள் ஒன்று சேர்ந்து ஏராளமான பணம் சேர்த்துவைத்திருக்கின்றனர் ஆதலின், அவர்கள் பாடு அவ்வளவு கேடு இல்லை. பாவம்! ஜனங்கள் பாடுதான் பரிதாபம். ஒரு நாள் பொழுது விடிந்தால், 'இன்று நிலக்கரியில்லை, அல்லது ரயில்வண்டியில்லை. இன்று மின்சார வெளிச்சம் இல்லை அல்லது இன்று ஜனங்களுடைய ஆகாரத்திற்கும், ஆரோகியத்திற்கும் இன்றியமையாதன இல்லை' யென்று கேள்விப்படுகிறோம். ஜனங்கள் பாடு எப்படியானால் எமக்கென்ன என்கின்றனர் தொழிலாளிகளும், முதலாளிகளும். அந்தோ பரிதாபம்! பொது ஜனங்கள் என்செய்வர்,

இந்தச்சண்டை உலகத்தில் ஒரு தேசத்தில் இல்லை. ஐந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, எங்கும் காணப்படுகிறது. இது ஒரு தொத்து வியாதி மாதிரியிருக்கிறது. இது மனத்தைப் பிடிக்கும் வியாதி என்பதில் ஒரு ஐயப்பாடும் இல்லை. தொழிலாளிகள் தங்கள் சம்பளம் விஷயமாயும், உரிமைகள் விஷயமாயும், ஓய்வு நேரங்கள் விஷயமாயும், பரிகாரங்களைப் பெற வேலை நிறுத்தம் செய்வது சரியெனக் கொண்டாலும், தற்போது அவர்கள் தமக்கு வேறு ஒரு உரிமையிருக்கிறதென்று கொண்டாடுகின்றனர். அது கலிகாலத்தின் அடையாளம் போலும். ஒரு அச்சாபீஸில் உள்ள அச்சுக்கோர்ப்பவர் எல்லாம் ஒன்று கூடி நாம் ஆமோதிக்காத ஒரு அபிப்பிராயத்தை பத்திரிகாசிரியர் தமது பத்திரிகையில் வெளியிடக்கூடாதென்று கருதி நாம் அதை அச்சிட மாட்டோம் என்றனர். மூளை செய்யவேண்டிய கடமையை கால் செய்ய எத்தனித்தது போலாயிற்று. இங்கிலாந்திலோ, அரசாட்சியார் ஓரிடத்திற்கு சில யுத்த சாமான்களையோ மற்ற எதையோ கொண்டுபோகவேண்டுமென்று அனுப்பினால், அத்தகைய சாமான்களைத் தூக்கிச்செல்லும் தொழிலாளிகள் தாம் அக்காருமத்தை ஒவ்வாததால் சாமான்களை அப்புறப்படுத்த மாட்டோம் என்கின்றனர். மந்திரிமாரும், ஜனப்பிரதிநிதிகளும் ஆலோசனை செய்து தீர்மானிக்கவேண்டியதை தொழிலாளர் தீர்மானிக்க எத்தனிக்கின்றனர். இது ஒரு விந்தையா? அல்லது பரிதாபத்திற்கு இடமான விஷயமா?

***

ஸ்ரீமான் வி. ஜினராஜதாசர் அவர்கள் ஆழ்ந்த யோசனையும் தீர்க்க திருஷ்டியும் உள்ள ஞானியாவர். 1914ஹு டிசம்பர் மாதத்தின் இறுதியில் நடந்த பிரம்மஞானசங்க வென்ஷன் பிரசங்கத்தில் கூறியது கவனிக்கத்தக்கது "இந்த யுத்தமானது முற்றுப்பெறும். ஆனால் இதற்குப்

பிறகு முதலுக்கும் தொழிலுக்கும் ஏற்படும் கோர யுத்தமானது உலகத்தை துன்புறுத்தும். பீரங்கி யுத்தத்தை விட அது மிகவும் கொடூரமானது" என்று கூறியுள்ளார். அது இப்போது நிதர்சனமாய்க் காணக்கிடக்கின்றது.

***

இவ்விதமாக உலகமெங்கும் சண்டையின் பற்பல வேற்றுமைகள் காணப்படுகின்றனவே. இதனைக்கொண்டுதான் இக்காலத்தைக் கலிகாலம் என்று நம் முன்னோர் அழைத்தனரோ. கலி என்றால் சண்டையென்றல்லவோ அருத்தம். இச்சண்டைக்குக் காரணம் என்ன?

***

உலகம்முழுவதும் உண்மையாய் ஒன்றுபட்டது. எல்லாம் அவ்வொன்றின் அங்கங்கள். ஒவ்வொருஜாதியும், தேசமும், ஜீவவர்க்கமும், அங்கங்களே. ஒரு அங்கமானது தான்மட்டும் தனித்திருக்கமுடியும் என்றும், மற்ற அங்கங்கள் எப்படியாயினும் என்ன என்றும் எண்ணுதல் மதியீனம். நாமும் ஈசுவரனுடைய அமைப்பில் எவ்விதம் முக்கியமான பாகமோ அங்ஙனமே மற்றவர்களும் முக்கியமான அம்சங்கள் தான் என்று உணரவேண்டியது அவசியம். அப்படி உணர்ந்தால் என் உரிமை என்னவென்று ஒருவனும் கேட்கான். என் கடமை என்னவென்று உணர்ந்து அதைச்செய்ய முன்வருவான். அப்படிச்செய்ய முன்வந்தால் உலகத்தில் சண்டையேது? அப்போது கலிநீங்கிவிடும். இங்ஙனம் உண்மையுணர்வு எப்போது நிகழும்? நமது பிரஹ்மஞான சபையின் உண்மையான கடமை இக்கருத்தை உலகில் பரப்புவதுதான். நமது பாரதவருஷத்தின் தருமமே இதுதான். நம் இந்தியாவில் நிகழும் வர்ணாசிரம ஏற்பாட்டின் உண்மையான அஸ்திவாரத் தத்துவமே இவ்வொற்றுமை பாவமும், அங்காங்கி பாவமும்தான். இவ்வுண்மை உலகமெங்கும் பரவுக! இவ்வுண்மையை உலகில் பரவும்படி முயன்றுவரும் பிரஹ்மஞான சபை

பின் முயற்சி பலன் பெறுக. நம் மாதிரு பூமியானது தான் இதுகாறும் போற்றிக்காப்பாற்றி வரும் உண்மையை உலகுக்கு ஈந்து தன்னையும் உலகையும் உய்விக்குமாக!

***

ஈசுவரன் இவ்வுண்மையை ஒவ்வொரு நிமிஷமும் விளக்கிக் கொண்டேயிருக்கிறார். நாம் நம் மறிவீனத்தால் கண் மூடிகளாயிருக்கிறோம். நம் வீட்டை சுத்தமாய் வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அடுத்த வீடு அசுத்தமாயும் நோய்க்கிடமாயும் இருக்கின்றது. ஆகையால் சீக்கிரத்தில் நாமும் நோயால் பீடிக்கப்படுகிறோம். ஓர் ஊரில் உள்ள பற்பல வீதிகளும் சுத்தமாயிருத்தல் வேண்டும். ஓர் தேசத்திலும் கூட ஓர் ஊரில தரித்திரம் அதிகமாயின அல்லது அசுத்தமதிகமாயின் வெகு சீக்கிரம் அத்தேசத்திற்கே அப்பீடை பரவுகின்றது. நமக்கு எதிரியான ஜர்மனி ஏழையானால் நாம் எவரோடு வியாபாரம் செய்வது. ஜர்மனியிடமிருந்து நஷ்டரூபமாய் வாங்கும் ரூபாயை விட, வியாபாரத்தால் அவர்களிடம் இருந்து பெறும் லாபம் அதிகமாகும் என்று கூறுகின்றனர் அறிவாளர். நம் விரோதி கூட க்ஷேமமாயிருந்தால் தான் நாமும் க்ஷேமமாயிருக்கலாம். ஆனால் இவ்வுண்மையை அனுஷ்டிக்கிறார்களோ? இல்லை அம்மா தர்ம்ய உலகத்தில் எல்லாப் பாகங்களையும் ஒற்றுமையாய் பாவிக்காமல் இருக்கிறார்களே ஐயோ! இதைவிடப் பரிதாபம் வேறு உண்டோ?

***

உலகம் எல்லாம் சமர் ஒழியும்படி எமது இறைவன் கருணை புரிவாராக.

ஆர். ரெங்கசாமி ஐயர்

புத்தக விமர்சம்.

அடையாறு புத்தகசாலை பண்டிதர் கே. ராமானுஜ சாஸ்திரிகள் அவர்களால் கவனம் செய்யப்பட்டு, வஸந்தா அச்சியந்திர சாலையில் அழகாக அச்சடிக்கப்பட்டிருக்கிற வஸந்தா விஜயம் என்ற 10 ஸமஸ்கிருத சுலோகங்கள் எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. உலகக்ஷேமத்தின் பொருட்டு நன்முகப்பாடுபட்டுவரும் பிரஹ்மஞான சபையின் தலைமையை வெகு கெம்பீரமாக வகித்து உலகத்தில் ஆஸ்திக தர்மத்தை பரவச்செய்து வந்தும், உலக நன்மையை உத்தேசித்து தன்னுடைய சிரமத்தை பாராட்டாமல், இந்தியாவிற்கு சுவராஜ்யம் கிடைக்குமாறு உழைத்து வந்தும், ஞானகுருவான பரமன் வரப்போகிறார் என்றும் வந்து தர்மத்தை நமக்கு போதிக்கும்படி செய்யப்போகிறார் என்றும் விளம்பரம் செய்து 73-வயது ஆகியும் வாலியர்கள் கூட வெட்கும்படி உற்சாகத்துடன் முயன்று வந்தும், நமக்கெல்லாம் ஆச்சரிய பூதமாயிருக்கும் ஸ்ரீ பெஸண்டம்மையை புகழ்ந்து இந்த சுலோகங்கள் அழகிய நடையில் யாவரும் எளிதில் அறியக்கூடியபடி எழுதப்பட்டிருக்கின்றன. வேண்டுவோர் அடையாறு புத்தகசாலை ஸமஸ்கிருதப்பண்டிதர் பலாஞர் ராமநாத சாஸ்திரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தர்மவித்யா ஞானோதய சங்கம், தேவகோட்டை ஸரஸ்வதி பஞ்சாங்கம் வைசியமித்திரன் அச்சுக்கூடத்தில் பிரசுரமாகிய, மேற்கூறிய பஞ்சாங்கமானது எமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இது ஒரு அழகிய சுவற்றில் தொங்கவிடும் காலண்டர். செட்டிநாட்டில் வைசிய நகரங்கள் தோறும் கலாசாலைகள் ஏற்படுத்தி மதாசார முறைப்படி பெண்களுக்கு இலவசமாகக் கல்வி கற்பிப்பதே இச்சங்கத்தின் நோக்கமாகும். மேற்கூறிய நோக்கங்கள் மிகவும் சிலாக்கியமானவை யென்றும், தற்காலத்திய நாட்டுக்கோட்டை செட்டிப்பிள்ளைகளுடைய பொம்பற்ற தர்ம சிரத்தையானது நாட்டின் க்ஷேமத்திற்கு மேலாகக் கொண்டுவிடும் இந்நல்ல துறைகளில் செலுத்துவது இக்காலத்தின் அறிகுறி யென்றும், அது யாவருக்கும் சந்தோஷகரமான விஷயமென்றும், நாம விசேஷமாய எடுத்துக் கூறுவது மிகையாகும்.

வைசியமித்திரன் பிரதி சோமவாரமும் காரைக்குடியிருந்து வெளிப்போந்துவரும் இவ்வரிய வாராந்தர தமிழ்ப்பத்திரிகையின் சஞ்சிகைகளைப் பார்வையிட்டு நாம் மிகவும் ஆனந்தமடைந்தோம். இப்பத்திரிகையில் ராஜ்யப் பொது விஷயங்களைப் பரிசீலனை செய்வதுடன் நகரத்தார் ஜனசமுதாயச் சீர்திருத்த விஷயமாயும் பல வியாசங்கள் வெளிவருவது பாராட்டத்தக்கது. இதன் வருஷ சந்தா ரூ. 5—0—0

வர்ணாசிரம தர்மங்கள்.

[தர்மப் பிரசாரமென்ற கன்னட மாதப் பத்திரிகையினின்று அல்லாட மஹா தேவசாஸ்திரிகள் அவர்கள் எழுதியதின் மொழிபெயர்ப்பு.]

இந்துக்கள் என்பவர் யார்? இந்து மதமென்றாலென்ன? என்பதாக அனேகர்கள் வினவுகிறார்கள். இதற்குப் பதிலளிப்பது சுலபமன்று. அனேக மதங்கள் சேர்ந்து இந்து மதமாகிறது. ஆகையால் ஹிந்துக்கள் என்று எல்லோருக்கும் ஸம்மதமான மதம் இதுவென நிர்ணயம் செய்தல் கஷ்டஸாத்யமாகவே இருக்கின்றது. ஆனாலும் என் புத்திக்கு எட்டிய வரையில் அதை நிர்ணயிக்க ஸம்மதிக்கிறேன்.

ஹிந்துமதமெனின், வர்ணாசிரம தர்மமென்றும், ஹிந்துவெனின், வர்ணாசிரம தர்ம நிபந்தனைகளுக்கு உட்பட்டவனென்றும் சாமான்யமாகச் சொல்லக்கூடும். இந்த வர்ணாசிரம தர்மத்திற்கு மூலகாரணமாயுள்ளது வேதோக்த தர்மம். ஆனாலும் வேதோக்தமான மூலதர்மம் மாத்திரமே ஹிந்துமதமாகமாட்டாது. வேதோக்த மூலதர்மமே காலக்கிரமத்தில் சிறுகச்சிறுக மாறிக்கொண்டுபோய் வேதோக்தமல்லாத அனேக அம்சங்கள் சேர்ந்து இப்பொழுது ஹிந்துமதமென்பதாகச் சொல்லப்படும் வர்ணாசிரமதர்மரூபமாக இருக்கிறது. வேதோக்த மூலதர்மம் எப்படிப்பட்டது, இப்போதைய ஹிந்துமதத்தில் எந்த அம்சம் வேதோக்தமான மூலதர்மரூபமாகவிருக்கிறது, எந்த அம்சம் அதனுடைய மாறுபாடாகவிருக்கிறது, எந்த அம்சம் அந்த மூலதர்மததிற்குச்சேர்க்கப்பட்டது, இவைகளையெல்லாம் இப்பொழுது நிர்ணயஞ் செய்தல் வேண்டும்.

வேதோக்த மூலதர்மத்தை முதலில நிர்ணயிக்கிறேன். அது வர்ணுசிரமத்திற்கு மூலகாரணமானபடியால் அதனிடம் இப்போதைய வர்ணுசிரம தர்ம ஸம்மந்தமான பீஜ ரூபங்களெல்லாம் இருக்கவேண்டியதல்லவா? ஆகையால் வேதோக்த மூலதர்மத்தை நிரூபிப்பதில் (1) தர்மஸ்வரூபம் (2) வர்ணஸ்வரூபம் (3) வர்ணதர்மம் (4) ஆசிரமதர்மம் (5) ஆசிரம விபாகம் (6) வர்ணவிபாகம் என்ற இந்த ஆறு அம்சங்களை கிரமமாக நிரூபிக்கிறேன். முடிவில் மூலகாரணமான வேதோக்த வர்ணுசிரம தர்மமானது இப்போதைய ஹிந்து மதத்தில் எவ்விதம் பரிணமித்ததென்று நிரூபிக்கிறேன்.

தர்மஸ்வரூபம்.

தர்மமென்றால் என்ன? முதலில் தர்மஸ்வரூபத்தை நிரூபிக்கவேண்டியிருக்கிறது. பிரபஞ்சத்தில் எந்த பதார்த்த ஸ்வரூபமாகட்டும் க்ஷணகாலமாகிலும் ஒரேவிதமாக இராதென்பது எல்லோருக்கும் அனுபவஸித்தமான விஷயமே. நன்றாய்ப் பரிசீலனை செய்துபார்க்கவே பதார்த்தங்களிடத்து இவ்விதமாறுதல்கள் எல்லாம் சில நியமங்களை அனுசரித்து உண்டாகின்றனவென்பதாக நிச்சயமாகும். அவ்வித விதிகளைக் கண்டுபிடித்தல பரீக்ஷகர்களுக்கு ஸாத்யம். ப்ரபஞ்ச கதிகளை நன்றாய்ப் பரிசீலனை செய்தவர்கள் சொல்வதென்னவெனின் :—ப்ரதி பதார்த்தத்தினிடமும் சைதன்யம் இருக்கிறது, அந்தந்த பதார்த்தங்களிடத்துள்ள சைதன்யம அந்தப் பதார்த்தத்தின் ரூபத்தைத் தரித்து ஈசுவரனுடைய நியமானுஸாரப்படி தான் சங்கர்ப்பித்த மாதிரியில பரமாவதியான ஒரு பதவியை அடையக்கூடிய மார்க்கத்தைப் பிடித்து முன்னர் சென்றுகொண்டேயிருக்கும், இவ்வித சேதன பதார்த்தங்களின் கதிரூபமாயுள்ள இந்த ஸம்ஸாரப் பிரபஞ்சமெல்லாம் ஜகதீசுவரனும் ஸர்வஞ்ஞனுமான பகவானுடைய ஆஜ்ஞானுஸாரம் ஈசுவராம்சமான சிலதேவர்களால் நடப்பிவிக்கப்பட்டுக்

கொண்டிருக்கும். ஈசுவரன் தேவர்களின் துவாரா பிரபஞ்சத்தை யெல்லாம் மேல் ஸ்திதிக்கு நடப்பிவிக்கும் மார்க்கமே தர்மம் எனப்படும். இது தர்மத்தின் ஸாமான்ய ஸ்வரூபம். நாம் "தர்மம்" என்பது இதனுடைய விசேஷ ரூபமாயிற்று. தர்ம அர்த்த காமமோக்ஷங்களென்ற நான்கு புருஷார்த்தங்களில் ஒன்றான தர்மமே நாம் தர்மமென்கின்றோம். அதன் ஸ்வரூபத்தில் ஒரு விசேஷமுளது. அதென்னவெனின் :—இப்பிரபஞ்ச மெல்லாம் ஈசுவரன் நியமித்த தேவதைகளாலே நடப்பிவிக்கப் படுதல் உண்மையே. ஆனாலும் கொஞ்சம் தூரம் நடப்பிவிக்கப்பட்ட பின்னர் தாமாகவே முன்செல்லும்படி ஜீவர்கள் விடப்படுகிறார்கள். அப்பொழுது ஜீவர்கள் புத்தி பூர்வகமாய் ஈசுவரானுகூலமாக நிசுழாவிடில் அந்த ஜீவர்களுக்கு முன் செல்லுதல் ஸாத்யமாகாது. ஜீவர்களுக்கு ஸ்வதந்தரமாகவும் ஸ்வபுத்தி பூர்வகமாயும் சங்கற்ப புரஸ்ஸரமாயும் வர்த்திப்பதற்கு சக்தி வருமளவும் தேவர்கள் அவர்களுடைய யோக க்ஷேமத்தைப்பார்த்துக்கொண்டிருப்பார்கள். முடிவில் மேலுக்குச் செல்லும் மார்க்கத்தைத் தெரிந்துகொண்டு அவர்கள் தங்களுடைய யோக க்ஷேமத்தைப் பார்த்துக் கொள்வதற்கு சக்தி உள்ளவர்களாகிறார்கள். இவ்விதம் மேல் ஸ்திதிக்குச்செல்லவேண்டியதற்காக ஈசுவரானுகூலமாய் ஜீவர்கள் புத்திவிவேகத்தோடு நடக்கக்கூடிய மார்க்கத்தையே நாம் இப்பொழுது தர்மமென்பது. இம்மார்க்கத்தில் செல்வோர்களுக்குப் பிரபஞ்சத்தில் அதிக சுகமும் மோக்ஷமும் லபிக்கும் முடிவில் அவர்களுக்கு ஈசுவரஸாயுஜ்யமும் சித்திக்கும.

தர்மம் சாஸ்திரத்தாலே தெரிந்துகொள்ளக் கூடியது.

இவ்வித தர்மத்தை நமது புத்தியால் மாத்திரம் அறிய முடியாது அந்த தர்ம மார்க்கத்தில் இடைவிடாமல் நடந்து ஸித்தி அடைந்தவர்கள் சொல்லவே, முதலில் நாம் அந்த தர்மங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். தர்மத்

தை அனுஷ்டித்து ஈசுவர ஐக்யத்தை ஸாக்ஷாத்கரித்தவர்கள் சொன்னாலொழிய நமது புத்தியில் அவ்வித தர்மஸ்வரூபத்தை ஊஹித்தல் ஸாத்யமன்று. மஹா மகிமையுள்ள தேவர்கள் மஹரிஷிகள் முதலியவர்களுக்கே மானிடர்களிடத்துள்ள ஜீவசைதன்யத்தின் வாஸ்தவ ஸ்வரூபமும் ஜீவேசுவரர்களுக்குள்ள வாஸ்தவ ஸம்பந்தமும் அனுபவத்தில் புலப்படும். ஈசுவரன் இந்தப் பிரபஞ்சத்தை எவ்விதம் நடத்துகிறார் என்பதும் அந்தப் பிரபஞ்ச கதியில் மனிதனுடைய கதி எப்படிப்பட்டதென்றும் மனிதன் தனது அபிவிருத்திக்காக எம்மார்க்கத்தில் நடக்கவேண்டுமென்பதுவுமாயுள்ள இவையெல்லாம் அவ்வித மஹான்களைத் தவிர மற்ற எவர்களாலும் நிர்ணயிக்கக் கூடியதல்ல. ஆன்மலாபத்திற்கு ஹேதுவான தர்ம மார்க்கத்தைக் குறித்து நமக்குக் கிடைத்திருக்கும் யதார்த்த ஞானமெல்லாம் அப்படிப்பட்டவர்களின் மூலமாகவே வந்திருக்கின்றன. அப்படிப்பட்டவர்களின் உபதேசம் லபித்த மாத்திரத்தில் மனிதன் ஸஹஜமாக இந்திரியங்களின் துவாரா பஹிர் விஷயங்களில் ஆஸக்தி உடையவனாயிருப்பதாலே தனது அந்தராத்மாவின் ஸ்வரூப தத்வத்தையும் அதை அடைவதற்கு மார்க்கத்தையும் கொஞ்சமேனும் அறியமாட்டான். ஆனது பற்றி தர்ம மார்க்கத்தை இதரர்களுடைய உபதேசத்தால் மாத்திரமே தெரிந்துகொள்ளவேண்டும். ஈசுவராம்சபூதமான ஜீவாத்மாவின் நிஜஸ்வரூபம் ஆத்மலாபோபாயமான தர்ம மார்க்கம் இவைகளைக் குறித்து ஈசுவரன் நியமித்த தேவர்கள் மஹரிஷிகள் அனுக்கிரஹித்த தத்துவ உபதேசமே சுருதி என்பதாகவும் வேதமென்பதாகவும் சொல்லப்படும். சுருதிகள் பரமார்த்த தத்துவங்களையும் ஸநாதன தர்மங்களையும் குறித்துச் சொல்வதாய் இருக்கின்றமை பற்றி அவை ஸநாதனமென்பதாக சொல்வதும் உண்டு.

ஸனாதன தர்மமும் ஸமயாசாரமும்

இவ்வித ஸனாதன தர்மங்கள் வேறு அவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு அப்போதைக்கப்போது அந்தந்த

ஜனங்களில் சிஷ்பர்களாயுள்ளவர்கள் தங்களுடைய லௌகிக வைதிக வெளி வியவஹாரார்த்தமாகச் செய்து கொள்ளும் நியமங்கள் வேறு. ஸநாதன தர்மமோ ஜனங்களின் வெளிவியவஹாரங்கள் எப்படியிருக்கவேண்டுமென்பதாக ஸாமான்யமாய் சூசிப்பிக்கும். ஆனால் வெளிவியவஹாரங்களின் விசேஷாம்சங்கள் அவ்வக்காலத்திற்கேற்ப அப்போதைக்கப்போது உள்ளவர்களின் புத்தி சீலஸம்ஸ்காரங்களை அனுசரித்து மாறிக்கொண்டுபோகும். ஆகையால் அந்த விசேஷாம்சங்களின் விஷயமான ஆசார நியமங்கள் மாறுபடவேண்டியவைகளே. இப்பொழுது அப்போதைக்கப்போது வித்தமாகம் (அதாவது ஜனங்கள் தாமேஸங்கேதத்தால் ஏற்படுத்திக்கொள்ளும்) ஆசார விதானங்களே ஸ்மிருதிகள் என்ற கர்ம சாஸ்திரங்களில் சொல்லியிருப்பவை. இவையே வர்ணாசிரம தர்மங்கள்.

ஸநாதன தர்ம ஸ்வரூபம்

சாசுவத தர்மமெது? அதன் ஸ்வரூபம் எப்படி? இந்த அம்சங்களைக் கொஞ்சம் விசாரிப்போம். தர்ம சப்தத்தின் உத்பத்தி அர்த்தமென்னவெனின் தரித்தல். தர்மமெனின், ஆன்மாவைத் தரிக்கும் மாதிரி, அதாவது ஆன்மா நிம்மதியாக இருக்கக்கூடியவிதம். ஆன்ம லாபத்திற்காக ஆன்ம ஸ்வரூபத்தில் இருத்தல் தர்மம். ஆன்மலாபத்திற்கு உபாயம் தர்மமென்னப்படும்.

𑌅𑌯𑌂 𑌤𑍁 𑌪𑌰𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌯𑌦𑍍𑌯𑍋𑌗𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥

(யாக்ஞவல்கியஸ்மிருதி) என்று கூறியபடி ஆத்ம தர்சனத்திற்கு சாதனமே பரமதர்மமே. ஆத்ம தரிசனம் எவ்வளவுக்கெவ்வளவு சித்திக்குமோ அவ்வளவு மனிதனுக்கு சுகமும் பிரபஞ்சத்திற்கு அதிக சுகமும் லபிக்கும். ஆனது பற்றி எந்த மார்க்கத்தில் நடந்தால் மனிதனுக்கு

விசேஷவிருத்தி உண்டாகுமோ எவ்விதம் இருந்தால் மனிதனுடையவாழ்க்கை பிரயோஜனமாயிருக்குமோ அது தர்ம மார்க்கமென்னப்படும். ஆன்ம லாபம்ஆகக்கூடிய மார்க்கமே நாம் பிரயோஜனமுள்ளதாக ஜீவிக்கும் விதம் எம்மாதிரி நடந்தால் மனிதனுக்கு பரமார்த்த சித்தி உண்டாகுமோ அதாவது அவன் மானிட ஜன்மத்திற்கு ஸஹஜமான தோஷங்கள் எல்லாவற்றையும் போக்கடித்துக்கொண்டு ஜீவாத்ம பரமாத்ம ஐக்யத்தை ஸாக்ஷாத்காரம் செய்ய அறிவானே அதே பரம தர்மம். ஈசுவரனிடம் நிகழும் மாதிரியே பரம தர்மம். அதை லக்ஷியத்தில் வைத்து நடந்தால் மனிதனுக்கு எல்லா பிரபஞ்ச சுகங்களும் லபித்து பரமபுருஷார்த்தங்கள் கிடைக்கும். ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதை 17-வது அத்யாயத்தில் தன்னிடமே சாசுவத தர்மம் தங்கியிருக்கிறதென்பதாகக்கூறியிருக்கிறார்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌹𑌮𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌅𑌵𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 𑌚
𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌸𑍁𑌖𑌸𑍍𑌯𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌸𑍍𑌯 𑌚

அதாவது ஆதி அந்தமில்லாதவனும் குறைவில்லாதவனுமான ஈசுவரனே பிரபஞ்சத்திற்கெல்லாம் காரணபூதன் ஸகல பிரபஞ்ச சுகத்திற்கும் முடிவில்லா சுகத்திற்கும் காரணபூதமான சாசுவத தர்மமும் அதன் பலபூதமான பரமானந்தமும் பகவானிடம் மூர்த்தீகரித்திருக்கிறதென்பதாகத் தாத்பர்யம். தர்மஸ்வரூபம் இப்படிப்பட்டது, மானவர்களிடம் இப்பொழுது ஸஹஜமாய்த்தென்படும் தோஷம் எல்லாவற்றையும் விட்டொழித்து சர்வ பதார்த்தங்களுக்கும் காரண பூதனாகி சகல ஆனந்தத்திற்கும் ஆசிரயபூதனாகி ஆதியந்தமில்லாத பகவானிடம் ஐக்யத்தை அடைதலே பரம தர்மம். இந்த ஐக்யம் எவ்வளவுக்கெவ்வளவு கோசரமாகிக்கொண்டுவருமோ அவ்வளவுக்கவ்வளவு நிஜமான ஆத்மஸ்வரூபமும் ஆத்மாவினிடம் ஸஹஜமாயுள்ள பரமானந்தமும் அனுபவத்திற்கு வரும். மனிதனுக்கு இவ்வித ஸித்தி உண்டாதல் நிச்சயம். ஏனெனில், மனிதன் ஸ்வரூபத்தில் ஈசுவராம்ச பூதன்.

மமைவாம்சோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந:।

எனது அம்சமே பிரபஞ்சத்தில் ஜீவரூபமாகவிருக்கும் ஜீவன். அவன் என்னைப்போலவே ஆதியந்தமில்லாதவன். (கீதை 15—8) என்பதாக ஸ்ரீகிருஷ்ண பகவான் ஸாதித்திருக்கிறார். ஸ்ரீபகவானே மூர்த்திகரித்த சாசுவத தர்மம் ஆனபடியால் பசுவ தம்சபூதர்களான நாமிடமும் அவ்வித தர்மம் மூர்த்திகரிக்குமேயாமாகில நமக்கு ஸ்வரூபஸித்தியாகும். அதாவது எல்லாவ்யாபாரங்களிலும் ஈசுவரனைப்போல் ஒழுக நாம் பிரயத்தனம் செய்யவேண்டும். பகவான் உலகத்தில் எவ்விதம் பிரவிருத்தித்துவருகிறார் என்பதை சாஸ்திரங்களால் அறியலாகும்.

பகவத்கீதையில் கூறுகிறதாவது ஜகத் ஸருஷ்டி ஸ்திதி லயங்களுக்குக் காரணபூதனான பகவான் இப்பிரபஞ்சத்தில் பிரகிருதி புருஷர்கள் என்ற ரூபங்களைத் தரித்திருக்கிறார். அசேதனமான பூத பௌதிக பதார்த்தங்களே பிரகிருதி புருஷனெனின், அவ்வித பதார்த்தத்தினிடமிருக்கும் சைதன்யம் அவைகளுக்கு ஜீவனாகவிருக்கும். அந்த ஜட பதார்த்தங்களெல்லாம் ஜீவரூபமாகவிருக்கும். ஈசுவர சைதன்யத்திற்கு அதீனப்பட்டு நிற்கும். ஈசுவரனே புருஷரூபத்தோடு பிரகிருதிப்பிரபஞ்சத்தைத் தரித்து நடப்பிவித்துக்கொண்டிருப்பார். ஈசுவரன் ஆலோசித்துச் சங்கற்பித்து உண்டாக்கிய வழியில்தான் நமக்குப் புலப்படும் பூத பௌதிகப் பிரபஞ்சமெல்லாம நடந்துகொண்டிருக்கும். இவ்விதம் ஈசுவரன் தான் உண்டாக்கிய பூத பௌதிகப் பிரபஞ்சத்தை அதில் ஜனிக்கும ஜீவசைதன்ய அபிவிருத்திக்கு அனுகூலமாக நடத்திக்கொண்டிருக்கிறார். இந்த விதானமே சாசுவத தர்மம் எனப்படும். ஆகையால் மனிதன் அனுஷ்டிக்கக்கூடிய தர்மம் எவையெனின் அவன் ஈசுவரனைப்போல நடக்கவேண்டும். தன்னிடமுள்ள ஜீவ சைதன்ய சக்தியை விருத்தி செய்துகொண்டு ஜடமான சரீரேந்திரியாதிகளை அச்சைதன்யத்திற்கு வசப்படுத்தல் வேண்டும். பௌதிக சரீராதிகளிடம் நானென்ற பாவத்

தை ஒழித்து ஈசுவர சைதன்யாம்ச பூதமான ஜீவ சைதன்யத்தையே தனது நிஜமான ஸ்வரூபமென்பதாகத் தெரிந்துகொண்டு சரீரேந்திரியங்கள் வசமாகாமல் இருக்கவேண்டும். அந்தச் சரீரேந்திரியங்கள் தனது அபிவிருத்திக்கு சாதனமான வேலைகளைச் செய்வதற்காக தான் உபயோகிக்கத் தகுந்த உபகரணங்களை என்பதாகத் தெரிந்துகொள்ளத்தக்கது. தனது இச்சானுசாரமாகக் கீழ்ப்படிந்து நடக்கும் வண்ணம் அவைகளை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். எப்பொழுது இந்தச்சரீர இந்திரிய ஜயமும் ஸ்வதந்திரமும் பரிபூரணமாக சித்திக்குமோ அப்பொழுது தனக்கும் சர்வ ஸ்வதந்திரனை பகவானுக்கும் ஸ்வபாவஸித்தமான ஐக்யானுபவம் கோசரமாகும்

ஆத்ம சமர்ப்பணமென்ற யக்ஞமும் மூலதர்மம். ஜீவசைதன்யத்திற்குப் பூத பௌதிகமான சரீரேந்திரியங்கள் மீது இருக்கக்கூடிய ஸ்வதந்திரம் எப்படிப்பட்டதென்பது புருஷ ஸூக்தமென்ற வேத பாகத்தில் சொல்லப்பட்டிருக்கும் சிருஷ்டிப் பிரகரணத்தால் தெரியவரும். அங்கு பிரஜாபதி இந்த உலகத்தையும் அதனிடத்திலுள்ள ஜந்துவர்க்கத்தையும் எவ்விதம் சிருஷ்டிசெய்தாரென்பதற்கு விபரம் காட்டப்பட்டிருக்கிறது. ஜனன மரண ரஹிதமாயும் ஆனந்தமாயுமுள்ள தன சாசுவத பதவியை விட்டு இந்த உலகத்தையும் அவற்றில் சேதனா சேதன பதார்த்தங்களையும் சிருஷ்டி செய்யவேண்டியதற்காக பிரஜாபதியானவர் கீழ் இறங்கிவந்தார். சம்சார பந்தத்தில் சிக்கியுள்ள ஜீவராசிகளின் அபிவிருத்திக்காகவே பிரஜாபதி இவ்வித சிருஷ்டியைச் செய்தார். உலகத்தில் ஜீவன அனேக ஜன்மங்கள் எடுத்து தர்மத்தை ஆசரித்து அபபால ஆத்மலாபமென்ற பரமலாபத்தை அடைவான். சம்சார பந்தத்தில் சிக்கியுள்ள ஜீவர்களை உத்தாரணம் செய்யவேண்டி பிரஜாபதி தன் ஆனந்த பூரணமான பதவியைவிட்டு சம்சாரத்தில் பிரவேசித்து சம்சார சக்கரத்தை நடப்பிவிக்கிறார். இவ்விதம் ஸ்வலாப புத்தி கிஞ்சிற்றேனுமில்லாமல பிறர் நலத்தை அனுஷ்டிப்பதே பரிபூரணமான சரீரேந்திரிய ஜயமும ஆத்ம ஸ்வதந்தரமும எனப்படும். இவ்விதம பிறர்களுக்கு ஹிதம செய்பவரான பிரஜாபதியின் ஆத்ம சமர்ப்பணம் பிரதம தர்மமென்பதாகச் சுருதி கூறுகின்றது.

(தொடரும்)

ஜே. ஸ்ரீனிவாசராவ்.

வி. இராமச்சந்திரநாயுடு, தெலுங்கிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தவர்

அஹிம்ஸை.

ஹிம்ஸை என்றால் 'தொந்தரவு' என்று அர்த்தம். அஹிம்ஸை என்றால் தொந்தரவில்லாமை என்றர்த்தம். பிறருக்குத் தொந்தரவில்லாமல் இருப்பது தான் தர்மங்களுக்குளெல்லாம் சிறந்தது என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லியிருக்கிறார். கஷ்டப்படுகிறவர்களுக்கு நாமெல்லோரும் இரக்கப்படுகிறோம். அது மட்டும் போதாது. நம்மால் ஒரு பிராணிக்கும் வருத்தம் ஏற்படக்கூடாது. "நாம் ஒருபோதும் ஒன்றையும் துன்பப்படுத்தக் கூடாது" என்றிருப்பது தான் அஹிம்ஸை என்று சொல்லப்படுகிறது.

சிறு பிள்ளைகள் யோசியாமல் அடிக்கடி பிராணிகளின்மேல் கல் எறிகிறார்கள், யோசியாமல் மற்றப்பிள்ளைகளை அடிக்கிறார்கள். அவர்களுக்கு விவரம் தெரியாது. தெரிந்தால் அவ்விதம் செய்யமாட்டார்கள். பிறருக்குத் தீங்கு செய்யவேண்டுமென்ற எண்ணம் ஒரு குழந்தைக்கும் கிடையாது. வேண்டுமென்று கெடுதலைச் செய்ய ஒரு குழந்தைக்கும் தெரியாது. ஒரு பையன் பலசாலியாயிருந்தால், அவன் தன் பலத்தைக் காட்ட நினைத்துச் சிறு பிள்ளைகளை அடிக்கக்கூடாது.

எல்லாப் பிராணிகளிடத்தும் நாம் எப்போதும் பக்ஷமாகவே நடந்துவரவேண்டும். அவைகளோ பேசமாட்டா. பரிதாபம்! அவைகளை நாம் துன்பப்படுத்தினால், அவைகளுக்கு நம்மைத் தவிரப் போக்கெங்கே? அழும் குழந்தையை அதன் தாயோ உதறித் தள்ளிவிட்டால் அக்குழந்தை எங்கே போகும்? என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்? என்று அந்தப்பிராணிகளுக்குக் கேட்கத் தெரியுமா? தெரியாதே. ஒரு நாயாவது பூனையாவது நம் பக்கத்தில் வந்து நின்றால், அவைகள் ஓடிப் போகட்டும் என்று

நமக்குத் தோன்றுமானால், அவைகளை நாம் உதைப்பானேன்?

குதிரை வண்டியை யிழுக்கிறது. அது மிகச் சிரமப்பட்டு நம்மை இழுக்கும் போது அதைச் சவுக்காலடித்தல் தகுமா? அப்படியடிப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கலாமா? கழுதை எவ்வளவு பொறுமையுள்ள பிராணி! வண்ணான் சுமைகள் அத்தனையையும் சுமக்கிறது. அது அப்படிச் சுமப்பதனால் தானே நாம் சுத்தமான உடைகளை அணிய முடிகிறது. அப்படியிருக்க அதன் மேல் மட்டுக்கு மிஞ்சிச் சுமையேற்றலாமா? ஆகாது. கடவுள் சிருஷ்டித்த எல்லாப் பிராணிகளுக்கும் நாம் எப்போதும் பிரியமாகவே நடக்கவேண்டும்.

சில சமயங்களில் கழுதை அங்கும் இங்கும் அலைந்து திரியக்கூடாதென்று கருதி வண்ணான் இரண்டு கால்களைச் சேர்த்துக் கட்டிப்போடுகிறான். அதன் முன்னங்கால்களை இறுக்கக்கட்டாமல் நெகிழக்கட்டினால் அப்பிராணிக்குத் தொந்தரவில்லை. ஆனால் இரண்டுகால்களையும் இறுக்கிக் கட்டியாவது அல்லது முன்னங்கால்களோடு பின்னங்கால் ஒன்றையும் சேர்த்துக்கட்டியாவதுசெய்வது மிகக் குரூரமான காரியம் அதனால்காரியம் அப்பிராணி மிகுந்த தொந்தரவடைகிறது

உன்னை யாராவதொருவர் அடித்துக்கிள்ளினால், உனக்கு வலிக்கும் என்பது நன்றாய்த் தெரியும். அந்த வலி உண்டாகிறது எப்படி என்று மட்டும் உனக்குத் தெரியாது. உன் தேகமுழுவதும் தோலின் மேல் எத்தனையோ நுண்ணிய சிறு சிறு புள்ளிகள் உள்ளன. அப்புள்ளிகளிலிருந்து அநேகம் மெல்லிய இழைகளான நரம்புகள் தந்திக்கம்பிபோல் மூளையிற்போய்க் குவிகின்றன. அடித்துக் கிள்ளும்போது இந்த மெல்லிய இழைகள் அசைக்கப்பட்டு மூளைக்குச் சமாசாரம் எட்டுகிறது. உடனே தான் வலி ஏற்படுகிறது. மூளை வலியை உணர்கிறது. "எனக்குவலிக்கிறது" என்கிறோம்.

மிருகங்களுக்கும் இம்மாதிரி நரம்புகளும் மூளையும் உள்ளன. அவைகள் மட்டும் வாய் திறந்து பேசக்கூடுமானல் "எனக்கு வலிக்கிற" தென்று சொல்லும்.

ஆகையால் பிராணிகளை அடித்தல் தகாது. கல்லால் எறியலாகாது உதைத்தலும் கூடாது. எந்த விதத்திலும் அவைகளை ஹிம்ஸிக்கக்கூடாது. நம்முடைய பிரயோஜனத்திற்கு அவைகளை உபயோகிக்கலாம். ஆனல் அவைகளை அன்போடு நடத்தவேண்டும்.

தருமங்களிலெல்லாம் சிறந்த தருமம் எது ?

"அஹிம்ஸா பரமோ தர்ம:" என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் சொல்கிறார். குரூரமாய் நடப்பவனை பக்திமான் என்று நாம் ஒருபோதும் சொல்லவொண்ணது. அவர் சொன்னபடி நாம் நடக்க விரும்பினல், தொந்தரவு செய்யாமல் இருக்கவேண்டும். சில சமயத்தில் துன்பம் கொடுக்க அவசியம் ஏற்படுகிறதே என்பீர்கள். நாம் ஏதாவது வியாதியால் வருந்தும்போது நாம் பூரண சுகம் பெறுவதற்காக வைத்தியர் சிகிச்சை செய்கிறார். நமக்குச் சிரமமேற்படுகிறது. ஆனல், "பிற்பாடு நீடித்த சுகம் அடைவிப்பதற்காக அவசியம் வருத்தப்படுத்தவே வேண்டும்." என்று உணர்வு வைத்தியருக்கு நிச்சயமாய்த் தெரியும். விளக்கெண்ணெயை உட்கொள்வது நமக்குச் சிரமமாயிருக்கிறது. ஆயினும் நம் தாயார் நமக்கு ஏன் அதைக்கொடுக்கிறாள் ? நம்மை ஏன் சிரமப்படுத்துகிறாள் ? அதனல் தான் நமக்குச் சுகம் உண்டாகும் என்று நம் தாயார் நன்கு அறிகிறாள். அதே மாதிரி சில சமயங்களில் பிராணிகளை வருத்தப்படுத்தலாமேயொழிய வேறல்ல. அவை எவ்வளவு வருத்தமடையும் என்பதை யோசியாமலும் கவனிக்காமலும் அவைகளைக் கஷ்டப்படுத்தக்கூடாது.

மஹானாகிய மநு என்ன சொல்கிறார்? "எவனைக்கண்டு எந்தப்பிராணியும் சிறிதும் பயப்படாதோ, இறந்த பிறகு

அவனும் ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை. என்ன வருமோ, எது வருமோ என்று பயப்படவேண்டியதில்லை"

நம்முடைய புராணங்களில் அநேக ரிஷிகளையும், ஞானிகளையும், குருக்களையும் பற்றிய கதைகள் அநேகம் உள்ளன. அவர்கள் ஒருபோதும் ஒன்றுக்கும் ஒரு தீங்கும் செய்வதில்லை. அப்படிப்பட்ட பெரியோர்களைத்தான் "யோகிகள்" என்று சொல்வது. அவர்கள் எல்லாப் பிராணிகளுக்கும் பரம சிநேகிதர்கள்.

காட்டில் சன்னிச்சையாய்த்திரியும் துஷ்ட மிருகங்கள் கூட அவரை யொன்றும் செய்வதில்லை. பாம்புகள், விஷ ஜந்துக்கள் ஊர்கின்ற இடங்களிலும் யாதொரு தீங்குமில்லாமல் அவர்கள் நடப்பர். பக்ஷிகள் தாராளமாய் அவர் கையில் வந்துட்காருர். மிகுந்த அச்சமுடைய மானும் கூட நிர்ப்பயமாய் அணுகி அவர் கையிலிருக்கும் ஆகாரத்தைத் தின்னும் உயிர்ப்பிராணி எல்லாவற்றினிடத்தும் அவர் பிரியமாயிருக்கிறர். ஆகையால் தான் அவரை "எல்லாப் பிராணிகளுடைய ஹிதத்தையும் கோருபவர்" என்று சொல்வது வழக்கம்.

"எல்லாப் பிராணிகளையும் தன்னுடைய ஆத்மாவைப் போல் எவனொருவன் பார்க்கிறனே ஒரு தீங்கும் செய்யாமல் எவனொருவன் இருக்கிறனே, எவனொருவன் கோபத்தைத் தனக்குள்ளேயே அடக்கிறனே, அவன்தான் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் பரமசுகத்தை யடைகிறன்."

நாமெல்லோரும் மஹரிஷிகளைப்போல் அவ்வளவு சரியாய் நடக்கமுடியாது. ஆனல் நாம் எல்லோரும் செய்யக்கூடியது ஒன்றுண்டு. அதில் சிறு குழந்தைகளும்கூட மஹரிஷிகளைப்பின் பற்றலாம். மற்றவர்கள் நமக்கேதாவது குற்றஞ் செய்தாலும் அவர்களை நாம் மன்னித்துவிட வேண்டும்.

பி. எஸ். ராமசுப்பையர்.

சிறுவர் பக்கம்.

பிக்ஷை.

ஒரு பெரிய பட்டணத்தினருகில், அப்பட்டணத்துக்குப்போகும் ராஜபாட்டைகளொன்றில் ஒருநாள், வயது முதிர்ந்து, நோயினல் தளர்ந்த கிழவனொருவன், உலாவிக் கொண்டிருந்தான்.

அவனது கால்களில் சிறிதும் சதையே யிருக்கவில்லை உடுத்திருந்த ஆடைகள் அனைத்தும் கந்தல்களாகவும், தலை 'கழுத்தின் மேல்' நில்லாமல் 'குனிக்குனிந்து' தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டுமிருந்தான். பார்த்தவர் எந்த நிமிஷம் இக்கிழவன் இடறிவிழுந்து பிராணனை விடுவனே என்று பரிதபித்தனர்.

சிறிது தூரம் செல்லுமுன், இவனுக்கு ஆயாஸமும் பலஹீனமும் அதிகரித்ததினல் இவன் அங்கிருந்த ஒரு கல்லின்மேல் 'அப்பாடா' என்று சொல்லிக்கொண்டே தன் முகத்தை இருகைகளாலும் பொத்திக்கொண்டும், முழங்கைகளைத் தன் முழங்கால்களின் மேல் ஊன்றிக்கொண்டும் தலை குனிந்தும் உட்கார்ந்துவிட்டான். கண்ணிலிருந்தோ நீர் தாரைதாரையாகப் பிரவஹித்து இவன் உட்கார்ந்திருந்த இடமெல்லாம் ஓட ஆரம்பித்தது.

அச்சமயம், இம்மனிதனுக்குத் தனது ஜன்மத்தின் பூர்வ விருத்தாந்தங்களெல்லாம் ஞாபகத்திற்கு வந்தன:

தான் ஒரு காலத்தில் அதி ஐசுவரியவானுக விருந்ததும் சுகமனுபவித்ததும் பின்பு தனக்கு வேண்டியும் வேண்டாமலுமிருந்த ஜனங்களுக்கு உதவித் தனது சொத்து அனைத்தையும் தோற்றதும் ஒன்றொன்றாக இவனது ஞாபகத்திற்கு வந்தது.

இப்போது இவனுக்கு 'ஒரு கவளம்' அன்னம் கொடுப்பாருமில்லை! இவன் வாழ்ந்த காலத்தில் இவனிடமிருந்து உண்டுகளித்த ஜனங்கள் அனைவரும் இவனைக் கைவிட்டுவிட்டனர். அவர்கள் கண்ணாணத் தன் கதி இப்படியாயிற்றே என்று வெட்கி ஏங்கினான்.

இவன் இவ்வாறு சிந்தித்திருக்கையில் மேற்கூறியபடி கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகி ஓடின இடமெல்லாம் சிற்றுருவங்களை யமைத்துச் சென்றது.

அவ்வமயம் யாரோ தன் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவதுபோல் அவனது காதிற்பட்டது.

உடனே அதிக சிரமத்துடன் தன் தலையை நிமிர்ந்து பார்க்கையில் தான் அதுவரை பார்த்திராத ஒரு நூதன மனிதன் தன்னெதிரே நிற்பதைக் கண்டான்.

இந்நூதன மனிதனது முகம், வாடிச் சுருங்கிருந்தது. ஆயினும் கடுகடுப்புக் காணவில்லை. சாந்தமாகவே யிருந்தது. கண் விழிகளில் சிறிதும் ஒளி யிருக்கவில்லை. அதனால் அவை இம்மனிதன் வஸ்துக்களைக் கண்கொட்டாமல் ஊன்றிப் பார்க்கும் சுபாவமுடையவனென்றும் தெரிவித்தன.

"உன் ஆஸ்தி அனைத்தையும் தானம் செய்துவிட்டாய் அல்லவா? அது இப்போதும் உனக்கு சங்கடமாகத் தானே இருக்கிறது" என்ற கேள்வியுடன் நூதன மனிதன் கிழவனோடு வார்த்தையாட ஆரம்பித்தான்.

"ஓஹோ அதெப்படியாகும்! தானம் தருமம் செய்தேனே யென்ற கஷ்டம் சிறிதும் எனக்கில்லை! இப்போது பட்டினியினால் என் பிராணன் போகும் சமயமாயிருக்கிறது: ஆயினும் என் கையில் இப்போதும் ஏதாவது பணம் காசு இருந்தால் அதையும் வேண்டுவோர் யாரையேனும்

கண்டால் அவருக்குக் கண்டிப்பாய்க் கொடுப்பேன்." என்று, பெருமூச்சு விட்டுக்கொண்டு கிழவன் பதிலுரைத்தான்.

"ஆஹா நீ சொல்வது சரிதான். உலகத்தில் ஏழையே இல்லாவிட்டால் நீ யாருக்குத் தானம் செய்வாய்?" என்று நூதன மனிதன் திரும்பி வினவ, அதற்கு இன்னதுதான் பதில் சொல்வதென்று தெரியாமல் கிழவன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான்.

சற்றுப் பொறுத்துப் புது மனிதன் "நீர் பெரிய மனிதன் என்பது நன்றாய் விளங்குகிறது. ஆனால் உம்மிடம் கர்வம் சிறிது ஒட்டிக் கொண்டிருக்கிறது, அந்த கர்வத்தை விட்டுவிட்டு "தேஹி" என்று கையை நீட்டி உலகத்திலுள்ள மற்ற புண்ணிய புருஷர்களிடமிருந்து பிக்ஷைகொள்ளும். அவர்களுக்கும் தங்கள் உதார குணத்தை காட்ட ஒரு வழி யுண்டாகட்டும்." என்றான்.

கிழவன் இவ்வளவு நேரம் தம்மிடம் இவ்வாறு வழக்காடினது யார் என்று திடுக்கிட்டு எழுந்து தன்னைச்சுற்றி நாற்புறமும் பார்க்கையில் ஒருவரையுங் காணவில்லை. வெகு தூரத்தில் யாரோ ஒரு மனிதன் தானிருக்குமிடம் நோக்கி வருவதை மாத்திரம் கண்ணுற்றான்.

உடனே கிழவன் தானிருந்த இடம் விட்டு எழுந்து தன்னெதிரே வந்த மனிதனிடம் கையை நீட்டினான். அம்மனிதன் முகத்தைச் சுளுத்துக்கொண்டு அப்புறஞ்சென்றானே யல்லது ஒன்றுங் கொடுக்கவில்லை. சிறிதுநேரஞ் சென்றபின் அவ்வழியே இரண்டாவான் ஒருவன் வர அவனிடமும் கிழவன் தன் கையை நீட்டினான். அவன் தன் சக்திக்குத்தக்க தானம் வழங்கி அப்பாற் சென்றான்.

இரண்டாவான் கொடுதத காசைக் கொண்டு கிழவன் கடைவீதி சென்று சிறிது ரொட்டி வாங்கித்தின்று தன் களையையும் பசியையும் ஆற்றிக்கொண்டான்.

அப்போது கிழவனுக்குண்டான அகமகிழ்ச்சிக் களவேயில்லை. கர்வமும் உடனே அவனை விட்டகன்றது. அவன் மனதில் அளவில்லா ஆனந்தமுங் குடிகொண்டது. அப்போது தான் "தன்னுயிரைப்போல் மன்னுயிரை நினை" என்ற முதுமொழியின் அர்த்த விசேஷ மின்னதென்று அவனுக்குப் புலப்பட்டது.

S. R. அனந்த நாராயண அய்யர்.

புத்தக விமர்ஸம்

குழந்தைகளைப்பாதுகாக்கும் முறையில் ஜாக்கிரதை பெற்றிருக்க வேண்டிய சுருக்க விஷயங்கள்.—பெற்றோர் உபாத்திமார் அங்கத்தின் பிரசுரங்களில் ஒன்றின் மொழிபெயர்ப்பு டி. ஏ. கோபால்சாமி நாயுடு அவர்கள் மொழிப்பெயர்ப்பாசிரியர்—விலை அணு 3. தபாற் கூலி வேறு.

இந்தியாவில் உயர்தர உத்யோகத்தை ஒரு ராஜ்யதிகாரி ஒருவரால் ஆங்கிலத்தில் வெகு காலத்திற்கு முன்னர் எழுதப்பெற்ற ஒரு பத்திரிகையின் தமிழில் மொழிபெயர்ப்பாகும். இது குழந்தைகளை வளர்க்கும பாக்கியம் பெற்ற எவரும் இப்புத்தகத்தை வாசித்து, வாசித்த பின்னர் ஏனையோருக்குப் படிக்கும்படி கொடுக்கவேண்டிய புத்தகமாகும் இது. மதுரை பூர்ணசந்திரோதயம் ஆபீஸில் கிடைக்கும்.

மாயாவாதம்.

மாயா என்றால்:
- (1) பிரஹ்ம ஜாலம் (Cosmic Illusion)
- (2) ஈசுவர பக்தி (Divine Power)
- (3) ஜடப்பிரகிருதி (Matter)
- (4) அவித்யா (Ignorance)

இவ்வாறு அந்தந்த மதத்துக்கிணங்க மாயையென்ற பதம் பல அர்த்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இவைகளில் முதலாவது சொன்ன பொருள்தான் அத்துவைத மதத்துக்கு முக்கிய ஆதாரமான மாயாவாதம் எனப்படும்.

மாயா:
- ஆவரண சக்தி, உண்மையை மறைப்பது.
- விக்ஷேப சக்தி, தோற்றம்; இல்லாததை இருப்பதாய்த் தோன்றச் செயவது.

பிரஹ்மத்தின் நிஜஸ்வரூபத்தை மறைத்து வேறு விதமாய்த் தோன்றச் செய்வதே மாயா சக்தி எனப்படும். எடுத்த காரியத்தைச் சாதிக்க வல்லவனாயினும், அவ்வல்லமை அவன் ஸுஷுப்தி காலத்தில் அவனிடத்தில் லயம் (latent) ஆய் இருக்கின்றது. ஜாக்கிரகாலத்தில், இச்சாமாத்ரம, அவனுக்கு உபயோகமாகின்றது. அதுபோல பிரஹ்மத்தில் மாயை லயமாயிருக்கின்றது.

மாயை தனது ஆவரண சக்தியால் பிரஹ்மத்தை மறைத்து, விக்ஷேப சக்தியாகிய ஸாத்விகபாவத்தால் ஈசுவரனையும், ராஜஸபாவத்தால் ஜீவனையும், தாமஸபாவத்தால் பிரகிருதியையும் தோன்றச் செய்கின்றது. இத்தோற்றத்தை ஸ்ருஷ்டி எனவும், தோற்றம் மறைந்து மறுபடி மாயை தனது ஜால சக்தியைச் சுருக்கிக் கொண்டு பிரஹ்மத்தில் லயமாவதை பிரளயம் எனவும் கூறுவார்கள். இதுதான் அத்வைதிகளின் மாயாவாதம். இதிலேயே இரண்டு பேதங்களிருக்கின்றன.

(1). இப்படிப்பட்ட ஸ்ருஷ்டி பிரளயம் மாறி மாறி அடிக்கடி வருகின்றன.

(2). ஜகத் தோற்றம் எப்போதுமே இருக்கின்றது. ஞானத்தால், 'ஜகத்து ஒரு தோற்ற'மென்று அறிபவன் மாத்திரம் பிரஹ்ம ஸாக்ஷாத்காரமடைந்து, பிரஹ்மத்திலேயே லயமாகின்றான்.

மாயா வாதத்தில் பிரஹ்மத்துக்கு கர்த்திருத்துவ போக்திருத்துவமே கிடையாது. மாயை என்பது பிரஹ்மத்தில் அந்தர்யாமியாயுள்ள அனாதியான ஓர் சக்தி. அது காரணமாகவே இப்படிப்பட்ட தோற்றத்தை யுண்டு பண்ணுகின்றது. பிரஹ்மத்துக்குச் சங்கல்ப விகல்பமாவது, ஸ்ருஷ்டிக்க ஆசையாவது கிடையாது.

2-மாயா = ஈசுவரசக்தி

துவைதமதத்தார் மாயைஎன்ற பதத்தை இப்பொருள் பட உபயோக்கின்றனர். ஈசுவரன் (அல்லது ஸகுணப்பிரஹ்மம்) என்பது தத்துவத்திரயங்களில் ஒன்று. என்றுமுள்ள ஓர் ஸத். ஈசுவரன் தன் ஜாக்கிரகாலத்தில் தனது மாயா சக்தியால் பிரகிருதியை இவ்வாறு ஜகத்தாய்ப் பரிணமிக்கச் செய்கிறார். ஸுஷுப்திகாலத்தில் ஜகத்தைச்சுருக்கித்தன் உதரத்திலடக்கிக்கொண்டு நித்திரை செய்கிறார். இது தான் பிரளயகால மெனப்படும்.

3. மாயா — பிரகிருதி (Matter)

(1) மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாத் மாயிநம் து மஹேச்வரம் 1 { ஸ்வேத-உப 4-10 கீதை

(2) ஸத்வ ப்ரதாநப் ரக்ருதி:— மாயேதி ப்ரதிபாத்யதே 1 { ஸாஸ்வதிரஹஸ்ய உப—14

(1) ஜடப்பிரகிருதி, மாயை எனப்படும். ஈசுவரன் அதாவது அதை யாளக்கூடிய ஓர் மாயாவி.

(2) பிரகிருதியின் ஆதிபீஜ ஸத்வமான ப்ரதானம் (Primordial Atom) பிரகிருதி எனப்படும். ஸாங்கியர் முதலான ஜகத் பரிணாம வாதிகளனைவரும் இக்கருத்தை யங்கீகரிக்கின்றனர்.

$$4\text{-மாயா} = \begin{cases} \text{அவித்யா (Ignorance)} \\ \text{அஞ்ஞானம்} \\ \text{அறிவின்மை} \end{cases}$$

இது ஓர் அஸத் தத்துவம் (Negative abstract principle) அத்வைதிகளின் மாயாவாதத்தில் கூறும் மாயையைப்போல் ஆவரண விக்ஷேபசக்தியுடன் கூடிய (positive entity) ஸத் அல்ல. உண்மை யின்னதென்று அறிய கூடிய ஞானமின்மையே அஞ்ஞானம். அது மனிதனுடைய சக்திக்குறைவு அல்லது புத்திஇன்மையேயொழிய, பிரஹ்ம சக்தி, அல்லது ஈசுவரசக்தி, வேண்டுமென்று, மனிதனைத் திரைபோல மறைக்கின்றது, அல்லது ஜாலகன் போல் மனதை பிரமிக்கச்செய்கின்றது என்பதல்ல. ரஜ்ஜு ஸர்ப்பமாய்த் தோன்றுவது பார்ப்பவன் புத்திக்கோளாறே யொழிய, ரஜ்ஜுவின் குற்றமல்ல. ரஜ்ஜு ரஜ்ஜுவாகவே எப்போதும், இருக்கிறது. அதுபோலபிரஹ்மம் பிரஹ்மமாகவே இருக்கின்றது. அறியக்கூடாதவன் பலவாறாகப் பிரமிக்கின்றான்.

மாயாவாத மாயை ஓர் பிரஹ்மசக்தி. அவித்யா என்பது மனிதனுடைய சக்திக்குறைவு ஆனால் விவாதங்களில் சிற்சில சமயங்களில் மாயை என்ற மதத்தை இவ்விரு அர்த்தங்களிலும் கலந்தே உபயோகப்படுத்தி இருக்கின்றனர்.

நண்பன்—சற்று முன் இருந்த பொருள் எங்கே தான் போகும்

இழந்தவன்—யார் கொண்டுபோனரோ? மாய மாயிருக்கிறது.

சின்னப்பையன்—அப்பா! மாயை மென்றால் என்ன?

இழந்தவன்—ஈசுவரசக்தி ஈசுவரன் ஒரு மாயாவி நம்மைச்சோதிக்கவே இம்மோதிரி செய்வதுண்டு.

பி. ஏ. வாசித்தபையன்—இல்லே அப்பா! பண்டம் போன இடம் நமக்குத் தெரியவில்லை ஈசுவரன் ஒளித்து வைக்க வந்தாரோ? போன இடம் தெரியும் வரை நமது அறியாமை அல்லது அறிய முடியாமையை மாயம். மாயம் (Hidden Secret) என்போம். தெரிந்துவிட்டால் மாயமெல்லாம் பறந்து போய் விடும், தெரியாதெல்லாம் மாயம்! தெரிந்து விட்டால் உண்மை! ரயில்வண்டியின் யந்த்ர ஸூக்ஷ்மம் அறியாத பட்டிக்காட்டான், ரயில்வண்டி மாயமாய்ப் பறக்கிறது என்பான். அதை அறிந்த என்ஜினீருக்கு அதில் ஒரு மாயமுமில்லை. பிரகிருதி தத்துவ ரஹஸ்யங்கள் நமக்குத் தெரியாதவரை அவைகளை மாயம் (mysterv) என்றும், ஈசுவரலீலை (Miraculous) என்றும், திரை (Screen or veil) என்றும் சொல்லுகிறோம். அந்த ரஹஸ்யங்களை யறியவே மாயமாயிருந்தவை பிரத்தியக்ஷமாகின்றன. அதைத்தான் 'மாயை என்ற திரை ஞானிகளுக்கு முன் விலகிப்போகின்றது. ஞானிகளின் ஞானாக்னியால் பஸ்மமாகின்றது அத்திரைக்குள் மறைவாயிருந்த ரஹஸ்யங்கள் ஞானிகளுக்கு பிரத்யக்ஷஸாக்ஷாத்காரமாகின்றன' என்று கூறுகின்றோம். பிரஹ்மத்தைத் தவிர வேறொன்றுமில்லை என்கிற அத்வைதிகளும், பிரகிருதியைத் தவிர வேறொன்றுமில்லை என்கிற பிராகிருதர் (materialists) களும், ப்ரக்ருதி—புருஷன் இரண்டைத்தவிரவேறொன்றுமில்லை என்கிற ஸங்க்யரும் இக்கருத்தை தம்மதத்துக்கிணங்க ஒப்புக்கொள்ளத்தான் செய்கிறார்கள். அஞ்ஞானத்தால் பிரஹ்மஸ்வரூபம் உனக்குத்தெரியவில்லை, என்கிறார்கள் அத்வைதிகள். பிரகிருதி ரஹஸ்யம் தெரியவில்லை என்கிறார்கள், பிராகிருதர் ஜீவன்வேறு பிரகிருதிவேறு என்பது தெரியவில்லை, எனகிறார்கள் ஸாங்க்யர்.

ஆர். எஸ் நாராயணஸ்வாமி ஐயர்

ஸமாசாரக்குறிப்பு.

ஆலங்குடி:— ராமநாதபுரம் ஜில்லா பென்ஷன் தாசில்தார் கே. எஸ். ராமச்சந்திரையர் சென்ற 4-வருடகாலமாய் ஆலங்குடியில் வசித்து வருவதில் பொது நன்மை சம்பந்தமாகப் பலவகைகளில் அவர் உழைத்து வருவதாக ஸமஸ்தான தர்பாரவர்கள் அறிந்து ஸமஸ்தான ஜனப்பிரதிநிதிச் சபையில் ஒரு மெம்பராக அவரை நியமித்திருக்கின்றனர். இவர் மாதம் ஒரு முறை புதுக்கோட்டை ஸெண்ட்ரல் ஜெயிலுக்குப்போய் கைதிகளுக்கு நற்போதனை செய்து வருகிறார். வாரத்திற்கு 1-முறை ஒருவர் ஜெயிலுக்குப் போய் நற்போதனைசெய்வது அதிக சிலாக்கியமாயிருக்குமென்று ஷெயார் உணர்ந்து மகா-ள-ள-ஸ்ரீ தர்பார் அவர்களுக்குத் தெரிவித்ததில் அவர்களும் அதை அங்கீகரித்து. ஷெயார் குறிப்பிட்டுத்தெரிவித்தலாயரும் அபீஷியல் விஸீடருமான ஸ்ரீமான் சே. லெட்சுமண சர்மா பி. ஏ. பி. எல். அவர்களை வாரத்திற்கு ஒரு முறை ஜெயில் கைதிகளுக்கு நற்போதனை செய்யும்படி அநுமதி கொடுத்திருக்கிறார்கள். அய்யர் அவர்கள் பொதுநன்மை விஷயத்தில் தன்னாலியன்றமட்டும் ஊக்கத்துடன் உழைத்து வருகிற நல்ல நகரவாசி, இவர் ஜலவைத்தியத்தால் ஜனங்களுடைய வியாதிகளை சொஸ்தப்படுத்தி உபகாரம் செய்து வருகிறார். மேலும் இவர் சென்ற 3 வருடகாலமாய் ஸெண்ட்ரல் ஜெயில் கைதிகளுக்குள் ஒரு நன்னடக்கைச்சங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று முயன்று வந்ததில் சென்ற ஏப்ரல் மாதத்தில் அவ்விதச் சங்கம் ஏற்படுத்த மகா-ள-ள-ஸ்ரீ தர்பார் அவர்கள் அனுமதி அளித்தார்கள். நாளிது ஷ 11உ யன்று மேற்படியார் சங்கவிதிகளை தீர்ப்பு கைதிகளுக்கு எடுத்துரைத்து அதனால் உண்டாகும் நன்மைகளைத் தெளிவாய் எடுத்துச் சொன்னதின் பேரில் அன்றைத்தினம் ஆஜராயிருந்த 67 குற்றவாளிக் கைதிகளில் 54 பேர் மேற்படி சங்கத்தில் சேர்ந்து ரிஜிஸ்டரில் கையொப்பமிட்டார்கள்.

மேற்படி சங்கத்தின் விதிகளாவன

மேற்படி சங்கத்தில் சேரவிரும்பும் ஒவ்வொரு கைதியும் அடியிற்கண்ட விதிகளை அநுசரிப்பதாக அவனவன் குலதெய்வத்தின் பேரில் அல்லது கௌரவத்தின் பேரில் ஆணையிட்டு பிரதிக்ஞைசெய்யவேண்டும். ஒவ்வொரு மெம்பரும் ஒவ்வொரு நாளும் காலையில் கஞ்சிகுடிக்கும் முன்னும், மாலையில் சாப்பாடிற்கு முன்னும் ஐந்து நிமிஷம் ஈசுவரனை பிரார்த்திக்கவேண்டும் (அல்லது நற்சிந்தனையை தன்னைச் சேர்ந்த ஒருவருக்கு அனுப்ப வேண்டும்).

2. அவதூறான வார்த்தைகளை எக்காலத்திலும் உபயோகித்தல் கூடாது.

3. ஜெயில் விதிகளை அநுசரித்து நடந்து வரவேண்டும்.

4. ஒவ்வொரு மெம்பரும் மற்ற மெம்பர்களின் நடக்கையைச் சீர்படுத்தும் விஷயத்திலும் வேலை தெரியாதவர்களுக்கு வேலை சொல்லிக் கொடுக்கும் விஷயத்திலும் உதவி புரியவேண்டும். இச்சங்கத்திற்காக ஏற்பட்டிருக்கும் ரிஜிஸ்தரில் கையொப்பமிட வேண்டும். மெம்பர்கள் ஒவ்வொருவரும் சங்கத்தில் சேருங்காலத்தில் செய்யும் பிரதிக்ஞையை ஸதா ஞாபகத்தில் வைத்து அக்காரியத்தையும் செய்யும் பொருட்டு ஒவ்வொரு அங்கத்தினர்க்கும் ஒரு அல்லூமினியப் பதக்கம் கொடுக்கப்படும் அதை ஒரு நூலில் கோர்த்துக் கழுத்தில் அணிந்து கொள்ளல் வேண்டும். அதன் ஒரு பக்கத்தில் ஒரு நக்ஷத்திரமும் மற்றொரு பக்கத்தில் "கடவுள் துணை" என்ற வார்த்தைகளும் அமைக்கப்பெற்றுள்ளன.

இச்சங்கம் ஸரியாய் நடைபெறும்படி எல்லாம் வல்ல ஈசன் அருள் புரிவாராக. இச்சங்க விஷயத்தில் ஜெயில் அதிகாரிகளுக்கு யாதொரு சம்பந்தமுமில்லை. கைதிகளுக்கு மதத்தையும், ஸன்மார்க்க முறையையும் போதித்து வரும் போதகரின் பொறுப்பில் நடைபெறும். இவ்விதச் செய்கையல்லவோ பரோபகாரச்செய்கை.

கெ. எஸ். ராமச்சந்திரய்யர், பிரேரேபணையின் பேரில் ஸமஸ்தான பிரதம மத்யதரக் கல்விச்சாலைகளில் மத ஸம்பந்தமாகவும் ஸன்மார்க்கமுறை ஸம்பந்தமாகவும் கல்வி கற்பித்து வரும்படியாய் தர்பார் அவர்கள் உத்திரவு செய்திருப்பதாகக் கேட்க ஸந்தோஷமாகயிருக்கிறது.

சென்ற சில காலமாய் ஆலங்குடியில் இராப்பள்ளிக்கூடம் ஏற்பட்டு நடந்து வருவதில் ஷெடி பள்ளிக்கூடம் உபாத்தியாயராய் இருக்கும் ஸ்ரீமான் வ. எஸ். முத்துகிருஷ்ணய்யர் மிகவும் ஊக்கத்துடன் கல்வி கற்பித்து வருவதில் 60 பிள்ளைகள் வரையில் கல்வி கற்று வருகிறார்கள். இவருக்கு முன் இருந்த உபாத்தியாயா காலத்தில், ஒரு மாதத்திலாவது 35 மாணாக்கர்களுக்கு மேல் சேரவில்லை. மேற்படி 60 நபர்களில் 15 பேர் பஞ்சமர்கள் மீதம் 45 பேர்கள் வலையன், நாவிதன், வண்ணான் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள். தர்பார் அவர்கள் ஸரியாய் வரும் பையன்களுக்கு மாதயாதம சம்பளமும் கொடுத்து வருகின்றனர்.

இந்த ஸமஸ்தானத்தில் பிரதமப்படிப்பு இலவசமாய் கற்பிக்கப்படுகிறது.

விஷய சூசிகை

அமெரிக்கா பிரஹ்மஞான சபையின் சுருக்குறிப்பு 183
அன்னிபெஸண்டம்மையாரைப் பற்றிய
ஓர் அறிவிப்பு (எம் சுவாமிநாதையர்) 178
அன்னை வலைந்தை (செய்யுள்) 136
அஹிம்ஸை (B. S. ராமசுப்பையர்) 345
ஆத்மார்த்தக்கல்வி அவசியம் (கே. எஸ்.
இராமசந்திரையர்) 15
இறைவனுக்குத் தொண்டுசெய்வதெப்படி
(அன்னிபெஸண்டு) 151
உதய திசைதாரக சங்கம் (ஹிரேந்திரநாத தத்தர்) 316
எல்லாம் வல்லாசன் (கே. எஸ். இராமசந்திரையர்) 76
கஷ்டமும் சக்தியும் (அன்னிபெஸண்டு) 9
குருபக்தி (நஞ்சுண்டையா) 304
குற்றவாளிகளைச் சீர்திருத்துவதெப்படி
கே. எஸ். இராமசந்திரய்யர்) 121, 145
கோபாலகிருஷ்ண கோகலே (வி. ரெத்தினம்) 55, 155
சமரஸ ஸ்தோத்திரம் (எஸ். சாமிநாதையர்) 214
சமாசாரம் 31, 64, 158, 182, 216
சாரணர் மகாசஞ்சாரம் (அ. ச. பெரியாழ்வார்) 289
சாரணர் கதை (என். எஸ். சு.) 110
சாரணர் பக்கம் 8
சாஸ்திர அதிசயங்கள் (ஆர். அரங்கஸாமி ஐயர்) 169
சிறுவர் பக்கம் 89 246, 273, 295
சுகம் (அகஸ்தியலிங்கம்பிள்ளை) 207
செய்யத்தக்கது எது, தகாதது எது?
(ஆர். எஸ். நாராயணஸாமி ஐயர்) 85
ஸ்திரீகள் (மிஸ். கே. ப்ரௌனிங்) 26, 41
தத்துவஞானமும் அனுஷ்டானமும்
(வி. ஜினராஜதாஸர்) 193, 231

தலைவரும் அவர் கடமையும் 201

தற்கால நிலைமை (ஆர். அரங்கஸாமி ஐயர்) 1, 33, 65, 97, 129, 185, 217, 249, 281, 329

தென் இந்தியா நக்ஷத்திரக்கன்வென்ஷன் (அருண்டேல் பிரசங்கம்) 300

தேசியக்கல்வி (ஆர். அரங்கஸ்வாமிஐயர்) 225

நடராஜர் (அகஸ்தியலிங்கம் பிள்ளை) 212

பத்திரிகை விமர்சம் 28

பிள்ளையார்சுழி (வரகவி சு. பாஷா ஸாஹிபு) 266

பிரஹ்மஞானமும் கல்வியும் (மிஸ்காட்) 115, 137

பிரஹ்மஞான சபையும் உதயதிசை நக்ஷத்திர சங்கமும் (ஆர். பஞ்சாபகேசையர்) 93

பிரஹ்மஞான தரிசனம் பாலபாடம் (வி. வெங்குசாமி ஐயர்) 46, 73, 105

புத்தகவிமர்சம் 29, 58, 91, 128, 288, 327, 352

பெற்றோர் உபாத்திமார் சங்கம் (ஸி. ஜினராஜதாஸர்) 23, 25

பொறுமை (சீதாலெக்ஷ்மி அம்மாள்) 59

மகாபாரதமும் மரம் முதலிய ஸ்தாவரங்களும் 62

மனிதனும் அதன் தர்மங்களும் (கிருஷ்ண ஸ்வாமி பி. ஏ.) 238, 257

மாதுஸ்ரீ பெஸண்டம்மையார் (ஸி. ஜினராஜதாஸர்) 164

மாதுஸ்ரீ பெஸண்டம்மையாரும் காந்தி வடிகளும் (பஞ்சாபகேசையர்) 172

வர்ணாசிரமதர்மங்கள் அ. மஹாதேவ சாஸ்திரி 337

விபச்சித்து உபாக்கியானம் (ஜெ. சீனிவாசராவ்) 49

ஹரிதாஸர் (ராமசந்திரன்) 324

படங்களுடன் கூடிய கதைகள்.

சுகிர்லாபம்—அல்லது நட்பின் மேன்மை		0—2—0
சிவாஜிமஹாராஜ்	} ஆர். என். நாராயணசாமி	0—2—0
குமணராஜன் —	} ஐயர் பி. எல்.	0—2—0

அரிய ஞானக் களஞ்சியங்கள்.

ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை	மாலயபக்ஷமும் நவராத்திரியும்
லோககுருவின் அவதாரங்கள்	அன்னிபெஸண்டம்மை சரித்திரம்
ஹிந்து என்பவன் எவன்	ஷை செய்யுள்
காயத்திரி	உணவுகளின் ரகசியம்
காயத்திரி ராமாயணம்	திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.

லோககுருவாகிய பரமன் வருவானேன்

ஒவ்வொன்றும் இரண்டணா

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
தியாஸபியால் உள்ள பிரயோஜனங்கள்
சர்வசமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷணை
மரணபயம் வேண்டாம். சாமார்க்கதீபம்

ஒவ்வொன்றும் மூன்றணா

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது
(2) ஸ்தூலப்பிரபஞ்ச தர்மங்களா — ஆத்மதர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் துரவஸ்தை
(7) காமதாசம (8) சின்னங்கள்.

தியானக்கிரம விஷயம்	0—4—0
ஹிந்து மததூஷணையின் பரிகாரம்	0—4—0
உதாஸீன ஸாது ஸ்தோத்திரம	0—6—0
பிராசீன தாயங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் ஷை	
கல்விகற்பித்தல்—ஈசுவர கைங்கரியம்	0—8—0
மனிதன் வம்சாவளியின் உண்மை	0—8—0
பிரம்மஞான விசாரத்தால் நமக்குறும் பயன் யாது	0—9—0
எனது ப்ரதிஜ்ஞை—வி. ஜினராஜதாஸர்	0—12—0
யோக உபந்யாஸங்கள்—அன்னிபெஸண்டு	0—12—0

தபாற் சார்ஜ் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

காகிதம் இன்மையாலும், மற்றும் பல அசௌகரியங்களாலும், இவ்விரு மாத சஞ்சிகைகளும் வெளிவர மிகவும் தாமதமாய்விட்டது. அதற்காக நாம் மிகவும் விசனிக்கிறோம். சந்தா நேயர்கள் அநேகருக்கு எங்கள்பால் மனவருத்தமிருக்கலாம். இருந்தபோதிலும் எங்கள் பேரில் கிருபைசெய்து தாமதத்தைப் பாராட்டாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

இனிய நாவல்கள்

மீனாட்சி சுந்தரம்	0—6—0
மாணிக்கவாசகர்	0—8—0
மங்களம்	0—4—0

எல்லாம் வல்ல ஈசன்.

சீக்கிரம் வெளிவரும்! விலை அணா 0—1—6

The brochure by Mr. K. S. Ramachandra Ayyar, Retired Tahsildar, Alangudi, treats, as the name denotes of "The Almighty power of God." The work, though intended for Primary Schools and their teachers, may with advantage, be read and digested by the students of secondary schools and colleges, as it throws light, in a condensed form, on a subject of which they have no clear idea. Tha author has done well in adopting the form of e dialogue which is sure to serve his purpose well. The principal points treated of are (i) Qualities distinguishing man from beast (ii) Immanence of God and His Almighty power (iii) man's journey in the three worlds with their distinguishing features and (iv) meaning of "death." The subjects though difficult are well handled by the free use of stories and facts familiar to boys in illustration of the statements made. This will greatly facilitate the understanding of the subjects. His treatment of "Immanence of God" and "man living in three pifferent worlds" by means of familiar stories and objects is splendid and lucid.

C. N. SUBRAMANIA AYYAR B. A.,
(Retired Assistant Inspector of Schools.)
Adyar, Madras